துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை செயற்திட்டம் - 2024

--

துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய கடன் உடன்படிக்கை இல 3716 – SRI இன் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது.
பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பிராந்திய ஒருங்கிணைவு என்பவற்றில் சாதகமான விளைவினை கொண்டிருப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கொழும்பு நகரத்தில் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குவதனை வகுத்தல், கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கான பயண நேரத்தினை குறைத்தல் மற்றும் துறைமுகத்திலிருந்து கொழும்பின் ஏனைய பிராந்தியங்களிற்கான போக்குவரத்தின் போது போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் என்பன எதிர்பார்க்கப்படும் நன்மைகளாகும். கொழும்பு நெடுஞ்சலையில் கொள்கலன்களின் நகர்வில் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சி காரணமாக கொழும்பின் புறநகரங்களிலுள்ள போக்குவரத்து நெரிசலும் எளிதாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்ட நடவடிக்கைகளானது வேலைகள் மற்றும் உபகரணங்கள், ஆலோசனை சேவைகள், செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் வட்டி மற்றும் ஒப்படைப்புக் கட்டணங்கள் எனப் பெயரிடப்பட்ட நான்கு கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.
கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 56,850.37 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 360.20 மில்லியனானதுடன் அதில் ரூபா 47,349 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 300 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகை ரூபா 9,501.37 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60.20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2016 பெப்ருவரி இல் தொடங்கியிருந்ததுடன் 2025 ஜுன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்கீட்டு குறைபாடுகள் /கணக்காய்வு விடயங்கள்	தொகை ரூபா மில்லியன்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 01 இன் பந்தி 07 இன் பிரகாரம்,	1,252,990,115	நிர்மான நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்ட வரி மற்றும்	தெரிவு செய்யப்பட்ட நிதி அறிக்கையிடல் சட்டத்துடன் இணங்கி

	கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் என்பன அது இடம்பெறும் போதே வெளிப்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும் ஒப்பந்த பகுதி அ வின் குறிப்பிட்ட விசேட நிபந்தனைகளின் உபபிரிவு 14.1 (ஆ) வின் பிரகாரம் 2022 பெப்ரவரி 19 தொடக்கம் 2024 ஒக்டோபர் 18 வரையான காலப்பகுதிக்காக ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,252,990,115 தொகையான வரிச்சலுகைகள் நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, மொத்த பெற வேண்டிய தொகை அத்தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.		சுங்கச்சலுகைகளுடன் தொடர்புபட்ட வழக்கமான ஏற்பாடுகள் என்பன தொடர்பாக விசேட கவனம் செலுத்த அனைத்து செயற்திட்ட பணிப்பாளர்களிற்கும் அறிவுரைகள் வழங்கப்படும்.	நடப்பதனை கணக்காளர் உறுதி செய்யவேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 01 இன் பிரகாரம், கொடுக்கல் வாங்கல் மற்றும் நிகழ்வுகள் கணக்கீட்டு நிகழ்வுகளில் பதிவுசெய்யப்பட வேண்டியதுடன் அவற்றுடன் தொடர்புபட்ட காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களிலேயே வெளிப்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும் பொறியியலாளர்களினால் சான்றுப்படுத்தப்பட மீளாய்வாண்டுடன் தொடர்புபட்ட 03 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் நிதிக்கூற்றுக்களில் ஓர் ஏற்பாடாக எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, மீளாய்வாண்டில் நடைமுறை வேலையானது ரூபா 73,692,567 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	73,692,567	ஏற்றுக்கொண்டனர். நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது IPC 56 ஆனது பொறியியலாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே ஏற்பாடுகள் கணக்குப்புத்தகங்களில் செய்யமுடியாமலிருந்தது.	தெரிவு செய்யப்பட்ட நிதி அறிக்கையிடல் சட்டத்துடன் இணங்கி நடப்பதனை கணக்காளர் உறுதி செய்யவேண்டும்.

(இ)	இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் இல 5 இன் பந்தி 43(அ) வின் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை நிதிநிலமைக்கூற்று திகதியில் உள்ள முடிவடையும் வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தில் மாற்றப்படல் வேண்டும். இருப்பினும் பெறவேண்டிய வேலை ஆரம்பிப்பு முற்பணம் மற்றும் செலுத்த வேண்டிய பிடிகாசு என்பன 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தினை பயன்படுத்தி மாற்றப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, பெற வேண்டிய வேலை ஆரம்பிப்பு முற்பண மீதி மற்றும் செலுத்தவேண்டிய பிடிகாசு மீதி என்பன முறையே ரூபா 213.84 மில்லியனினால் குறைத்தும் 153.52 மில்லியனினால் கூட்டியும் காட்டப்பட்டிருந்தது.	ரூபா 213.84 மில்லியன் மற்றும் ரூபா 153.52 மில்லியன்	வேலை ஆரம்பிப்பு முற்பணம் மற்றும் பிடிகாசு கொடுப்பனவு என்பனவை இறுதியான வெளிநாட்டு நாணயமாற்று விகிதப்படி மாற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.	தெரிவு செய்யப்பட்ட நிதி அறிக்கையிடல் சட்டத்துடன் இணங்கி நடப்பதனை கணக்காளர் உறுதி செய்யவேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 01 இன் பந்தி 88 மற்றும் 89 இன் பிரகாரம், நிதிநிலமைக்கூற்றின் முகப்பானது தனித்தனிரீதியில் முக்கிய உருப்படிகளை உள்ளடக்க வேண்டியதுடன் மேலதிக முக்கிய உருப்படிகள், தலைப்புகள் மற்றும் கூட்டுத்தொகைகள், அவ்வெளிப்படுத்தல் நிறுவனத்தின் நிதிநிலைமையுடன் விளங்கக்கூடிய மற்றும் தொடர்புபட்டதாக	ரூபா 65,850 மில்லியன்	கிரய நியமங்களுடன் தொடர்புடைய தேவையான கிரய உறிஞ்சல் செயற்திட்ட பூர்த்தியாக்கல் நிலையில் செய்யப்படும்.	தெரிவு செய்யப்பட்ட நிதி அறிக்கையிடல் சட்டத்துடன் இணங்கி நடப்பதனை கணக்காளர் உறுதி செய்யவேண்டும்.

	காணப்படும் போது நிதிநிலைமைக்கூற்றின் முகப்பில் பிரசுரிக்கப்பட வேண்டும். இருப்பினும், செயற்திட்டமானது நடைமுறை வேலையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட நெடுஞ்சாலை மற்றும் கடன் வசதியளிப்பு நிலையம் என்ற இரண்டு பிரதான சொத்துக்களை உள்ளடக்குகின்றது. 2024 திசெம்பர் 31 வரை கூட்டுமொத்தம் ரூபா 65,850 மில்லியன் இவ் இரண்டு செயற்திட்ட கூறுகளின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. அனைத்து கிரயங்களும் இரண்டு பிரதான சொத்துக்களின் இடையேயும் வேறுவேறாக காட்டாமல் நடைமுறை வேலையின் கீழ் உள்ளடக்கப்பட்டது.			
(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 2 இன் பந்தி 55 இன் பிரகாரம், காசு அல்லாத நகர்வுகள் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டிற்காக வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்களில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழுந்த நாணயமாற்று இலாபம் ரூபா 14.77 மில்லியன் காசுப்பாய்ச்சல் கூற்றில் அதன்படி சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	ரூபா 73,619 மற்றும் ரூபா 14.773 மில்லியன்	உடன்பட்டனர். சீராக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று இணைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்கால நிதிக்கூற்றுக்களில் முறையாக சீராக்கம் செய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.	தெரிவு செய்யப்பட்ட நிதி அறிக்கையிடல் சட்டத்துடன் இணங்கி நடப்பதனை கணக்காளர் உறுதி செய்யவேண்டும்.

2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா	உரிய பதிவேடுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா	உரிய பதிவேடுகளிலுள்ள விபரணம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
5,625,199	6,262,015	2024 இலான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த நிதிக்கூற்று PMU உத்தியோகத்தர்களின் பெற வேண்டிய சம்பள கொடுப்பனவுகள்.	ஏற்றுக்கொண்டனர்.	மிகுதிகள் பேரேட்டு மிகுதிகளுடன் இணங்குவதனை கணக்காளர் உறுதிசெய்ய வேண்டும்.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள்	இணக்கமின்மை / கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
அ)	2019 மார்ச் 15 ஆம் திகதிய முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் பந்தி 9.3.	செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டமானது இரண்டு மாதங்களிற்குள் ஒருமுறை நடாத்தப்பட வேண்டியதுடன் அதனூடாக செயற்திட்டமானது அம்முறைமையின் வினைத்திறனை கண்காணிக்க அவ்வப்போது மீளாய்வுகளையும் செய்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டின் போது மூன்று செயற்திட்ட வழிநடாத்த கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்ததுடன் 2019 தொடக்கம் 2023 வரை எட்டு வழிநடாத்தல் குழு கூட்டங்களே நடாத்தப்பட்டிருந்தன, மேலும் இது செயற்திட்ட செயற்பாடுகளை பாதகமான	2024 ஆம் ஆண்டிற்காக மூன்று வழிநடாத்தல் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.	சுற்றறிக்கைகளின் அறிவுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

		முறையில் பாதிக்கலாம்.		
(ஆ)	2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 9/2009.	சுற்றறிக்கைக்கு முறணாக, உள்வருகை மற்றும் வெளிச்செல்லலை விரலடையாலப்பதிவு இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தாமல், ரூபா 592,426.64 தொகையான மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.	2024.10.23 இல் விரலடையாலப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டதன் பின்னர், செயற்திட்ட அலுவலகமானது, உரிய மேலதிக நேர கொடுப்பனவுகளை சுற்றறிக்கை நிபந்தனைகளிற்கு இணங்க உத்தியோகத்தர்களிற்கு வழங்கும்.	சுற்றறிக்கைகளின் அறிவுரைகள் பின்பற்றப்படல் வேண்டும்.
(இ)	2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை.	செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டிற்காக, செயற்திட்ட உள்ளக கணக்காய்வு மீளாய்வுக்குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	உடன்பட்டனர். திருத்தும் செயற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	சுற்றறிக்கைகளின் அறிவுரைகள் பின்பற்றப்படல் வேண்டும்.
(ஈ)	2024 ஒக்டோபர் 24 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கைகள் இல DMA/2/2024 இன் பிரிவு 06.	2021 ஏப்ரல் 30 இலிருந்து செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆட்சேர்க்கும் செயன்முறை இன்னும் செயன்முறையிலுள்ளது.	சுற்றறிக்கைகளின் அறிவுரைகள் பின்பற்றப்படல் வேண்டும்.
(உ)	2019 மார்ச் 15 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 1/2019 இன் பிரவு 2.3.2 மற்றும் 2024 ஒக்டோபர் 24 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை இல	வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவத்தினை உறுதிசெய்ய முழு நேர அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டும். இருப்பினும் 2021 மார்ச் 15 இலிருந்து செயற்திட்ட பணிப்பாளர் பதவியானது பதில் கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டடிருந்தது.	முழு நேர அடிப்படையில் ஓர் நியமனத்திற்கான செயற்திட்ட பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பினை செய்ய 2025.05.07 இல் ஓர் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. தற்போதைய நாட்களில்	சுற்றறிக்கைகளின் அறிவுரைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

DMA/2/2024 இன் பிரிவு இல 4.1.1	ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இடம்பெற்று முடிந்துள்ளது.

3. பௌதீக முன்னேற்றம்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

	கூறு	செயற்பாடு	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு		தாமதம்/கணக்காய்வு விடயம்	தாமதங்களிற்கான காரணம்
			எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் அலகுகள்/சதவீதம்	அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/சத வீதம்		
(அ)	துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை யின் நிர்மானம்	நிர்மானம்	100	97.4	துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலையின் நிர்மானமானது 1,095 நாட்கள் நிர்மான காலப்பகுதியுடன் 2019 செப்தம்பர் 27 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது, மேலும் சிவில் வேலைகள் ஒப்பந்தத்தின் பிரகாரம் 2022 செப்தம்பர் 25 அளவில் பூர்த்திசெய்ய ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது. கோவிட் 19, பாதகமான காலநிலைகள் மற்றும் ஏழு இடங்களில் மனித எழும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதனால் ஏற்பட்ட இடையூறுகள் என்பன காரணமாக செயற்திட்டமானது 837 நாட்கள் கால நீடிப்பினை அனுமதித்திருந்தது.	தாமதத்திற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. அவைகளாவன பிரதானமாக, கோவிட் 19, இலங்கை துறைமுக அதிகார சபையினால் தளத்தின் உரிமையினை வழங்குவதில் தாமதம், பாதகமான காலநிலை மற்றும் தளத்தில் மனித எழும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட மை.

இதன் விளைவாக, பூர்த்தியாக்கல் திகதியானது 2025 மே 6 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சிவில் வேலை நிகழ்ச்சித்திட்டமானது ஆறு தடவைகளில் மாற்றியமைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, சிவில் வேலைகளின் ஒட்டுமொத்த செயலாற்றல் திட்டமிடப்பட்ட 100 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 97.4 சதவீதமாக இருந்தது. அதனால், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,783 நாட்கள் கடந்திருந்தன.

முகாமைத்துவத்தின் கருத்துரைகள்

நீடிக்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி 2025 மே 6 ஆகும். 2024 செப்தம்பர் அளவில் உண்மையான வேலைப்பரப்பில் 100% பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தும், எழும்புக்கூடுகளை புலனாய்வு செய்வதனால் இடையூறுகள் ஏற்பட்டிருந்தமை காரணமாக 94% மாத்திரமே பூர்த்திசெய்யமுடியுமானதாக இருந்தது. ஒப்பந்ததாரர் 2024 செப்தம்பரில் நிகழ்ச்சித்திட்டத்தினை (நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு - 7) திருத்தியமைத்திருந்தார். திருத்தியமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயலாற்றல் 97.4% ஆக இருந்ததுடன் அதனை அடையக்கூடியதாகவும் இருந்தது.

கணக்காய்வாளர் பரிந்துரைகள்

கால நீடிப்பினை வழங்கும் போது ஒப்பந்த நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

(ஆ)	கடல் சார் மையத்தின் நிர்மானம்	75.8	45	2019 ஆம் ஆண்டிற்கான பேஸ்லைன் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம்,	இச்செயற்திட்டமானது கோவிட் 19 தாக்கம், பாதகமான

		கடல் சார் மையத்தின் நிர்மானம் 2020 பெப்ரவரியில் ஆரம்பிக்க பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி அளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. இருப்பினும் பெறுகை செயன்முறையில் தாமதம் காரணமாக, ஒப்பந்தமானது ஆரம்பிக்க பட்டியலிடப்பட்டிருந்த திகதியான 2021 ஜூலை 07 இலிருந்து 17 மாதங்கள் கடந்த பின்னர் 02 வருடங்கள் காலத்திற்காக ரூபா 4,999.43 மில்லியன் ஒப்பந்த விலையில் கையளிக்கப்பட்டிருந்தது. மொத்தம் 778 நாட்கள் EOT 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கல் திகதி 2025 ஓகஸ்ட் 22 இற்கு மாற்றியமைக்கப்பட்டிருந்தது.	காலநிலை, தொழில் தருநரின் தேவைப்பாடுகளின் மாற்றியமைப்பு, ஒப்பந்ததாரரின் காசுப்பாய்ச்சலில் சிக்கல், துணை உடன்படிக்கையின் கைச்சாத்திடுவதில் தாமதம் மற்றும் ஐ.அ.டொலர் மாற்றங்கள் மீதான கொடுப்பனவுகள் போன்ற காரணமாக தாமதித்திருந்தது.

முகாமைத்துவத்தின் கருத்துரைகள்

2025 மே அளவில், ஒப்பந்ததாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்ட காரணங்கள் காரணமாக இலக்கினை அடைந்து கொள்ள முடியாமல் போனது, மேலும் EOT ஆனது 2025 ஓகஸ்ட் 22 வரை அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்ததாரர் தற்போது நிகழ்ச்சித்திட்ட மாற்றம் - 6 இன் பிரகாரம் வேலை செய்து கொண்டிருக்கின்றார்.

கணக்காய்வாளர் பரிந்துரைகள்

கால நீடிப்பினை வழங்கும் போது ஒப்பந்த நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ) ஒப்பந்த விசேட நிபந்தனைகள் பாகுதி அ வின் உபபிரிவு 14.1 ஆ(ii) வின் பிரகாரம், ஒப்பந்ததாரரினால் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி தவிர்ந்த அனைத்து தீர்வைகள், வரிகள், சுங்க தீர்வைகள் மற்றும் நுகரக்கூடியவைகள் மீதான ஏனைய வரிகள் (நிரந்தர அடிப்படையில்) என்பன விலைமனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விகிதங்கள் மற்றும் விலைகள் மற்றும் மொத்த விலைமனு விலை என்பனவற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். அதே நேரம் அதே உப பிரிவில் (ஆ) வில் குறிப்பிட்டபடி, சுங்கத் தீர்வை, மதுவரிகள், VAT அல்லது ஏனைய தீர்வைகள் என்பனவற்றின் வரிவிலக்குகள் வேலைகள் தொடர்பில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது, அதன் நன்மைகள் தொழில் வழங்குனரினால் நிறைவேற்றப்படல் வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் இடம் பெற்றன.		
i. ஒப்பந்த விசேட நிபந்தனையின் பிரிவு அ வின் பிரகாரம் ஒப்பந்ததாரர் செலுத்தப்பட்ட அனைத்து வரிகள் மற்றும் தீர்வைகளின் கவனமிக்க பதிவேடுகளை பராமரிக்க வேண்டியதுடன் பொறியியலாளர் / தொழில் தருனர் கோரும் போது அவ்ஆவணங்களை வழங்க வேண்டியும் இருந்தும், PMU ஆனது ஒப்பந்ததாரருடன் முறையாக ஒருங்கிணைவதனூடாக தேவையான தகவல்களை பெற்றிருக்கவில்லை.	காலப்பகுதி முழுவுதற்குமான ஆவணங்கள் ஒப்பந்ததாரரினால் பராமரிக்கப்பட்டிருந்தது. கப்பல் போக்குவரத்து (Cusdec) ஆவணங்கள் உள்ளடங்களாக அனைத்து ஆவணங்களும் PMU விலுள்ள கோப்பில் பராமரிக்கப்படுகின்றது. வரிச்சலுகைகள் தொடர்பான தகவல்கள் அக்கோப்பிலிருந்து பிரித்தெடுக்க முடியும்.	ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இணங்க ஒப்பந்ததாரர் கவனமிக்க ஆவணங்களை பராமரிப்பதனை செயற்திட்ட பணிப்பாளர் உறுதி செய்ய வேண்டும்.
ii. 226 பற்றுச்சீட்டுகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளிற்கான தேவையான அளவுகள், இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள், அதன் பெறுமதி, மற்றும் மீள் ஏற்றுமதிக்கான	அலுவலகத்தில் ஓர் தரவுத்தளம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், அனைத்து Cusdec படிவங்களும்	செயற்திட்ட பணிப்பாளர் ஒப்பந்ததாரரிடமிருந்தான தேவையற்ற நன்மைகளை மீளப்பெற்றுக்கொள்ள உடனடி நடவடிக்கை

தொடர்புடைய வரி விலக்கு பெறுமதிகள் என்பன தொடர்பான விபரங்கள் ஒப்பந்ததாரருடன் ஒருங்கிணைந்து நிரந்தர மற்றும் நுகரத்தக்க அடிப்படையிலான ஓர் பதிவேடு செயற்திட்டத்தினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, செயற்திட்டத்தினூடக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு சரக்குகளின் அளவு, செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட அளவு மற்றும் பயன்படுத்தப்படாமல் மீதமுள்ள அளவுகள் என்பன தொடர்பில் கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியவில்லை. அதன்படி, ஒப்பந்ததாரரிடமிருந்து தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் ஒப்பந்ததாரரிடமிருந்து உரிய நன்மைகளை பெற்றுக்கொள்வதன் மீது நிதிகளை மீளப்பெறுவதற்கான கால ரீதியான நடவடிக்கைகளில் குறைபாடு என்பன கணக்காய்வின் போதான குறிப்பிடத்தக்க ஓர் விடயமாக / பிரச்சனையாக அடையாளப்படுத்தப்பட்டது. அதன் பெறுபேறாக, ரூபா 1,252,990,115 தொகையான வரி விலக்களிப்பு செயற்திட்டத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை. CID,CESS மற்றும் PAL உள்ளடங்களாக இவ்வரிச்சலுகைகள் 2022 பெப்ரவரி 19 இலிருந்து திகதியிடப்பட்ட 226 பற்றுச்சீட்டுகளிற்காக இலங்கை சுங்கத்திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது.	அப்பராமரிக்கப்படும் கோப்புக்களில் காணப்படுகின்றன, மேலும் தேவையான தகவல்கள் அவ்ஆவணங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். இறக்குமதி செய்யப்பட்ட அளவுகளின் விபரங்கள் கணக்காய்வு அலுவலகத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட மற்றும் மீதமுள்ள அளவுகள் மீதான தகவல்களை சமர்ப்பிகக ஒப்பந்ததாரிற்கு வேண்டுகோள் விடுக்கப்படும். இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் தொடர்பாக தகவல்கள் PMU வில் காணப்படுகின்றன. வரிச்சலுகைகளின் நன்மைகள் மீதான பெறுவனவுகள் பொறியியலாளரின் மதிப்பீட்டின் கீழான இத்தகவலினை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தது.	எடுக்கவேண்டியதுடன் ஒப்பந்த நிபந்தனைகளின் (COC) பிரகாரம் தொழில் வழங்குனரின் உரிமையானது உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர் முறையான விசாரணையும் நடாத்தப்படல் வேண்டும்.

(ஆ)	கடன் வசதியளிப்பு நிலையத்தின் வடிவமைப்பு, வேலைத்தளம்,	ஏற்றுக்கொண்டனர். SLPA இனால்	கால நீடிப்பினை வழங்கும் போது ஒப்பந்த

	மற்றும் இலங்கைத்துறைமுக அதிகாரசபைக்கான பொருட்குவியல் வேலைகளின் கண்காணிப்பு என்பவற்றுடன் தொடர்புபட்ட ஓர் ஆலோசனை சேவைகளிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB) என்பவற்றிற்கிடையே ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் கீழ் பொருட்குவியலின் விபரமான வடிவமைப்பு மற்றும் விலைமனு ஆவணங்களை தயாரித்தல் மற்றும் ஒப்பந்ததாரரின் வடிவமைப்பினை மதிப்பீடு செய்தல் என்பன செய்யவேண்டியிருந்ததுடன் உடன்படிக்கை 2024 சனவரியில் காலாவதியாகியும் இருந்தது. ஒப்பந்ததாரரின் வேலைகளின் நீடிப்பு காரணமாக, ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வடிவமைப்புக்களினையும் மீளாய்வதற்கான CECB உடன்படிக்கை ஓர் துணைஉடன்படிக்கையூடாக 2025 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. உப உடன்படிக்கை இல 01 இன் பிரிவு 3 இன் பிரகாரம, செயற்திட்டமானது 2024 சனவரி தொடக்கம் 2024 திசெம்பர் வரை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியக (CECB) இற்கு ஓர் மாதந்த மேலதிக கொடுப்பனவு ரூபா 1,142,562 செய்ய வேண்டியுள்ளது. அதன்படி மீளாய்வாண்டின் போது CECB இற்கு மொத்தம் ரூபா 13,710,745 செலுத்தப்பட்டிருந்தது.	மும்மொழியப்பட்ட படி தொழில்தருநரின் தேவைப்பாடுகளில் மாற்றங்கள் காரணமாக, வடிவமைப்புக்கள் நேரத்திற்கு நேரம் மாற்றியமைக்கப்பட்டது. இது கூட வடிவமைப்பு மீளாய்வு காலத்தினை நீடிப்பதற்கு பங்களிப்பு செய்தது.	நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
(இ)	i. துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை இன் ஒப்பந்த விசேட நிபந்தனைகள் - பிரிவு அ வின் உபபிரிவு இல 14.5 இன் பிரகாரம், தளத்திலுள்ள மூலப்பொருட்களின் கொடுப்பனவுகளிற்கான அனுமதிக்கக்கூடியவைகளாக 08 உருப்படிகள் அடையாளம்	பின்வரும் விடயத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொண்டனர். பொறியியலாளர்களின் கணிப்பீட்டின் பிரகாரம், 903 தொன்களான வலுவூட்டல் 2024 நவம்பர் முடிவில் மீதமாகவிருந்தது. இத்தொகைக	தளத்திலுள்ள மூலப் பொருட்களின் கொடுப்பனவின் போது ஒப்பந்த நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர்

	காணப்பட்டுடன் IPC 37 2024 ஏப்ரல் 30 வரை எட்டு உருப்படிகளை உள்ளடக்கிய தளத்திலுள்ள மூலப்பொருட்களிற்கான கூட்டுமொத்தம் ரூபா 3,986,676,473.46 அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 05 வகையான வலுவூட்டல் உருப்படி ஆனது 2024 நவம்பர் 30 வரை பௌதீகசெயலாற்றல் 98 சதவீதத்தினை அடைந்திருந்த போதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2024 நவம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 547,350,000 தொகையான 1,230 தொன் வழுவூட்டல்கள் IPC 54 இன் பிரகாரம் மிகுதி 2 சதவீதுமான பௌதீக செயலாற்றலிற்காக தளத்திலுள்ள மூலப்பொருட்களாக காணப்பட்டிருந்தது.	ளில், 336 தொன்கள் வேலைகளின் உண்மையான வேலைப்பரப்பிற்காக தேவைப்பட்டிருந்தது. ஏனைய 567 தொன்களான தொகை வேலைக்காக ஒப்பந்ததாரரினால் வைக்கப்பட்டிருந்தது.	முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
ii.	இம் மூலப்பொருட்களானது வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் மிகுதி வேலைகளிற்கு தேவையானதல்ல என்பது அடையாளப்படுத்தப்பட்டிருந்தது, செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், ரூபா 179,068,000 தொகையான 503 தொன் வழூவூட்டல்கள் தளத்தின் மேலதிக மூலப்பொருட்களாக காணப்பட்டிருந்தமையும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, செயற்திட்டமானது IPC 37 இன் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொண்ட போது, 2024 ஏப்ரல் 30 தொடக்கம் தேவையற்ற நிதி நன்மைகளை அனுபவிக்க ஒப்பந்ததாரர் அனுமதிக்கப்பட்டார்.	பின்வரும் விடயத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொண்டனர். ஒப்பந்ததாரர் வேலைகளின் அவசர தன்மையையும் புதிய வேலைகளை பூர்த்திசெய்யும் வரை மிகுதி மூலப்பொருள் தொகைகளை வைத்திருக்கவேண்டும் எனவும் கூறியிருந்தார். வழுவூட்டல் இன் அளவு இக்காரணத்திற்காக தளத்திலுள்ள மூலப்பொருளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், VO -60 இற்கான ADB இன் ஒத்திசைவானது இன்னும் பெறப்பட்டிருக்கவில்லை.	தளத்திலுள்ள மூலப் பொருட்களின் கொடுப்பனவின் போது ஒப்பந்த நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

	மேலும், ஒப்பந்ததாரரிற்கு தளத்திலுள்ள மூலப்பொருட்களிற்கு கொடுப்பனவு செய்யும் போது இம் மூலப்பொருட்களின் குறிப்பிடத்தக்க அளவு தேவையற்ற இருப்பாக கவனத்தில் கொள்ளப்பட்டுளளது. அதன்விளைவாக, உண்மையான நடைமுறை வேலை கணிசமான மூலப்பொருள் கொடுப்பனவுகள் செய்யப்படுவதுடன் ஒழுங்குபடுத்தப்படவில்லை. இம்முரன்பாடானது தளத்திலுள்ள மூலப்பொருட்கள் உள்ளடங்களான தற்போதைய IPC மதிப்பீட்டிலிருந்து முன்னைய IPC மதிப்பீட்டினை அழிப்பதன் ஊடாக தீர்மானிக்கப்பட்ட தற்போதைய தேரிய பெறுமதியினை மதிப்பாய்வு செய்யும் போது வெளிப்படுத்தப்படுகின்றது. குறிப்பாக, அப்போக்கானது IPC இல 45 இலிருந்து குறைவடைந்து வருகின்றது. இந்நிலமையானது ஆலோசகரின் குறிப்பு விதிமுறைகளின் பிரிவு இ(IV) இல் கூறப்பட்ட படி IPC களை சரிபார்த்து பரிந்துறைக்கும் போது அவர்களது கடமைகளை செய்வதற்கு கண்கானிப்பு ஆலோசகர் தவறியிருந்தமையின் காரணமாக எழுந்திருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் இறுதிவரைக்குமான ஆலோசகர் கொடுப்பனவு ரூபா 2,452,771,489 ஆனது கணக்காய்வின் போது திருப்திப்பட்டிருக்கவில்லை.	மாறல்கள் தாமதித்திருந்தமையினால், அடுத்த IPC இலிருந்து மிகுதி அளவுகளை கழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தமானது கூட்டுமொத்த வகையாக இருந்ததனால், வேலைகளினது நிர்மானத்தின் கணிசமான பகுதி பூர்த்தியடையும் போது மாத்திரம் மதிப்பிடப்படும் எனவே, வழுவூட்டல் இன் பயன்படுத்தப்பட்ட அளவுகள் செய்துமுடிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதியினுள் உடனடியாக பிரதிபலிக்கவில்லை.	
(ஈ)	2024 ஒக்டோபர் 28 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதி இல 24/2008/713/009 இன் பிரகாரம், நிலையான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக்குழு (SCAPC)	பின்வரும் திருத்தத்துடன் ஏற்றுக்கொண்டனர். அமைச்சரவை அமைச்சர்களினால் அனுமதிக்கப்பட்ட படியான	உண்மையான வேலைப்பரப்பு மற்றும் பொறியியலாளரின் EPC விலை மனு ஆவணங்கள் என்பனவற்றின் உண்மைத்தன்மையை

வின் பரிந்துரைகள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான (ADB) ஒத்திசைவு என்பனவற்றின் கண்டிப்பான பின்பற்றுதலிற்கு உட்பட்டு ஒப்பந்த விலையினை 28,002.22 மில்லியனிலிருந்து ரூபா 68,337.22 மில்லியனாக மாற்றியமைக்க துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை இன் சிவில் வேலைகளிற்கான ஒப்பந்த விலைமாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மாற்றியமைக்கப்பட்ட ஒப்பந்த பெறுமதியானது சுங்கச்சாவடி, சேவை வழங்கும் கட்டிடம் (வளைவு 04), மற்றும் வளைவு 03 என்பனவை உள்ளடங்களாக தாமரை சுற்றுவட்ட - PAEH இணைப்பு வீதியின் மேம்படுத்தலிற்காக மாறல் கட்டளை இல 60 உடன் தொடர்புபட்ட ரூபா 5.26 மில்லியனிற்காக ரூபா 5.91 மில்லியன் மேலதிக மாறலினை உள்ளடக்குகின்றது.

மாறல்களின் சமர்ப்பிப்பின் மீதான தொழிநுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை, மற்றும் தொகுதி 5B, ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்பட்ட வேலைப்பரப்பு 5.7 என்பனவற்றில் சுங்கச்சாவடி, சேவை வழங்கும் கட்டிடம் (வளைவு 04), மற்றும் வளைவு 03 என்பனவை உள்ளடங்களாக தாமரை சுற்றுவட்ட - PAEH இணைப்பு வீதியின் மேம்படுதலானது செயற்திட்டத்தின் உண்மையான வேலைப்பரப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என கூறியிருந்தது. அதன்படி, வீதி வசதியினை ஆணையிடுவதற்கான ஆரம்ப தேவைப்பாடானது ரூபா 28,002.22 மில்லியன் தொகையான ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்பட்ட வேலைப்பரப்பில் உள்ளடக்கப்படவில்லை.

மாற்றியமைக்கப்பட்ட ஒப்பந்த விலையானது ரூபா 52,579.22 மில்லியன் ஆகும். ரூபா 68,337.22 மில்லியன் ஆனது பணம் பெறல் தொகையுடன் தொடர்புபட்டதாகும்.

உண்மையான ஒப்பந்த வேலைப்பரப்பானது வளைவு 3 மற்றும் 4, சுங்கச்சாவடி மற்றும் சேவை வழங்கும் கட்டிடம் என்பனவற்றினை இணைக்கும் வீதியினை உள்ளடக்கவில்லை. அதன் பெறுபேறாக மாறல் இல 60 ஆனது அறிமுகப்படுத்தப்பட்டது.

உண்மையான வேலைப்பரப்பு பகுதியின் ஒட்டுமொத்த அபிவிருத்தி திட்டத்துடன் தொடர்புபட்டு மேம்படுத்தப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டது.

தீர்மானிக்க ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

(உ)	PAEH செயற்திட்டத்தினை விடுவிப்பதற்காக இவ்வேலைப்பரப்புக்களை உள்ளடக்குவதற்கு இது தேவைப்படுகின்றது என SCAPC குழு வெளிப்படுத்தியிருந்தது. இருப்பினும் அடையாளப்படுத்தப்பட்ட வேலைப்பரப்பிலுள்ள இவ்விடுபாடானது 2024 செப்தம்பர் 03 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் (இல.44/2024), இவ்விஞ்ஞாபனத்தின் இணைப்பு V மற்றும் 2024 ஆகஸ்ட் 29 மற்றும் 2024 செப்தம்பர் 02ஆம் திகதிய SCAPC குழு அறிக்கைகள் போன்ற எதிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன்பெறுபேறாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், கப்பல்துறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சானது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கும் விஞ்ஞாபனங்கள் (2011 ஜூன் 10 ஆம் திகதிய இல. 11/1288/558/03] மீதான கையேட்டின் பிரிவு 3 (v) உடன் இணங்கியிருக்கவில்லை. அது ''விஞ்ஞாபனத்தின் இறுதிப்பந்தி அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி தேவையென்ற'' விடையத்தினை குறிப்பிட வேண்டும் எனக்கூறுகின்றது.	வளைவு 3 மற்றும் வளைவு 4 இன் இணைப்பு வீதிகள் ஒட்டுமொத்த அபிவிருத்தி திட்டத்தின் பூர்த்தியின்மை காரணமாக அவ்வளைவுகளை நீடிப்பதற்கான வடிவமைப்புக்களை ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நேரத்தில் இறுதியாக்கப்பட்டிராமையினால் உண்மையான வேலைப்பரப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இது ஒரு விடுபாடு அல்ல ஆனால் ஒரு நடைமுறை நிபந்தனை ஆகும். VO–60 இன் கோட்பாட்டிற்கான அனுமதி 2024 ஜூன் 3 இல் அமைச்சரவை அமைச்சர்களினால் பெறப்பட்டிருந்தது.	அனைத்து தொடர்புடைய விடயங்கள் மற்றும் மிக பொருத்தமான தீர்மானம் என்பனவற்றினை இலகுவாக விளங்கிக்கொள்ள அமைச்சரவையினை இயக்குவதற்கு அடிப்படையான தகவல்கள் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.
(ஊ)	2024 ஓகஸ்ட் 29 மற்றும் 2024 செப்தம்பர் 02 இல் நடாத்தப்பட்ட கூட்ட இல பல/LAT/03/2024 இன் பிரகாரம், மற்றும் நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகை குழு (SCAPC) தீர்மானங்கள் இல 2 மற்றும் 3 இன் பரிந்துரைகளின் அடிப்படையிலும் மேற்கூறப்பட்ட சமர்ப்பிப்பிற்காக ஓர் நியாயமான விலைக்குறைப்பினை அடைதற்கு ஒப்பந்ததாரருடன் பேரம்பேச அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரர் அப்பேரம்பேசப்பட்ட தீர்ப்பனவுகளுடன்	மாறல் இல 60 இலுள்ள விகிதங்கள் 25 வீத மேந்தலை மற்றும் இலாபம் என்பனவற்றை கூட்டிய HSR விகிதம் மற்றும் சந்தையில் நிலவும் விகிதங்கள் என்பனவற்றின் அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. பொறியியலாளர் அத்தொகையினை இறுதியாக்க முன்னர் ஒப்பந்ததாரருடன் பேரம்பேசியிருந்தார். அதற்கு மேலதிகமாக, ADB ஒத்திசைவு	SCAPC குழுத் தீர்மானம் அல்லது மேலதிக மாறல்களிற்கான ஓர் விலைமாற்றத்தினை பேரம் பேசுவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் என்பவற்றில் ஏதாவது ஒன்றுடன் இணங்கிநடப்பதனை செயற்திட்ட பணிப்பாளர் உறுதி செய்ய வேண்டியதுடன் மாறல்

	உடன்படாவிட்டால் அவ்வேலைகளை போட்டித்தன்மையான விலைமனு செயன்முறையின் ஊடாக செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்கூறப்பட்ட SCAPC அறிக்கைக்கு முன்னர் 2024 ஆகஸ்ட் 23 மற்றும் 2024 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய கடிதஇல SRM-JV/4 18/8447 மற்றும் SRM -JV/4 18/8436 என்பனவற்றின் பிரகாரம் வளைவு 3 மற்றும் 4 இற்கான மேலதிக மாறலிற்காக ரூபா 6,780,058,054 தொகையான கிரய மும்மொழிவினை ஒப்பந்ததாரர் அனுப்பியிருந்தார். அதன்பின்னர் 2024 செப்தம்பர் 12 ஆம் திகதிய கடித இல SRM-JV/4-18/8561 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரின் ஆரம்ப மொத்த கிரயமான ரூபா 6,780,058,054 ஆனது பொறியியலாளர் அல்லது தொழில் தருனர் இனால் வழங்கப்பட்ட அறிவுறையின் படி ரூபா 1,508,094,14.92 தொகையான 4 உருப்படிகளை அளிப்பதன் ஊடாக ரூபா 5,261,570,878 இற்கு குறைக்கப்பட்டிருந்தது. அதன் படி செயற்திட்டமானது SCAPC குழுத்தீர்மானத்திடனோ அல்லது மேலதிக மாறல்களிற்கான ஓர் விலை குறைப்பினை பேரம்பேசுவதற்கான அமைச்சரவை தீர்மானத்தினையோ பின்பற்றியிருக்கவில்லை. அதற்கு பதிலாக ஓர் வேலைப்பரப்பு குறைப்பு மாத்திரமே செய்யப்பட்டிருந்தது.	கிடைக்கப்பெற்றதன் பின்னர், இறுதி பேரம்பேசல் ஆனது ஆரம்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்க முன்னர் செய்யப்படும்.	கட்டளைகளை தயாரிக்கும் போது ஒப்பந்த நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
(எ)	2024 ஒக்டோபர் 28 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதி இல 24 /2008/713/009 இன் பிரகாரம் நிலையான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழு (SEAPC) தீர்மான இல 2 மற்றும் 3 இனை கவனத்தில் கொள்ளாது, செயற்திட்ட பணிப்பாளர் 2024 ஒக்டோபர் 14 ஆம் திகதிய கடித இல	மாறல் இல 60 ஆனது ஓர் ADB நிபுனரினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. இறுதி பேரம்பேசலானது ADB சம்மதம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் SCADC இனால் மேற்கொள்ளப்படும்.	SCAPC குழுத் தீர்மானம் அல்லது மேலதிக மாறல்களிற்கான ஓர் விலைமாற்றத்தினை பேரம் பேசுவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் என்பவற்றில் ஏதாவது ஒன்றுடன் இணங்கிநடப்பதனை

RDA/ADB/PAEHP/2-8-1/24-4661 இன் ஊடான இறுதி திருத்தப்பட்ட ஒப்பந்த பெறுமதி மீதான சம்மதத்திற்காக ADB இற்கு ஓர் வேண்டுகோளினை அனுப்பியிருந்தார். இருப்பினும் உரிய சம்மதங்கள் 2025 ஏப்ரல் 09 அளவில் ஒப்பந்த விலை மாற்றத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.		செயற்திட்ட பணிப்பாளர் உறுதி செய்ய வேண்டும்.
(ஏ) ஒப்பந்த விசேட நிபந்தனைகளின் பிரிவு 08 இன் உபபிரிவு 13.8 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரிற்கு செலுத்த வேண்டிய செய்துமுடிக்கப்பட்ட வேலைப்பெறுமதியின் வெளிநாட்டு நாணய பகுதிக்காக எவ்வித விலைச்சீராக்கங்களும் விண்ணப்பிக்கப்படல் ஆகாது இருப்பினும் ஒப்பந்ததாரரின் வேண்டுகோளின் படி நிலையான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழு (SCAPC) தீர்மானம் மற்றும் 2024 ஜனவரி 09 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதி இல 23/2544/608/074-1 என்பனவற்றின் தீர்மானத்தின் பின்னர், வெளிநாட்டு நாணய கூறின் கிரயத்தில் மாற்றத்திற்கான சீராக்கங்களுடன் தொடர்புபட்டு 2024 ஜூலை 03 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உரிய ஒப்பந்ததாரர்கள் போன்றவற்றிற்கிடையில் தனியான 02 துணை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் இடம்பெற்றன.		
i. மேற்கூறப்பட்ட அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதலானது ஏதாவது துணை உடன்படிக்கை செய்ய முன்னர் பெறப்படல் வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் ADB யின் ஒப்புதலுக்கான கடிதத்தின் பிரகாரம் ஓர் விலை வித்தியாசத்தினை	ADB ஆனது மும்மொழியப்பட்ட கொடுப்பனவுகளிற்கு அவர்களது ஆட்சேபனைஇன்மையை வெளிப்படையாக வழங்கியிருந்தது. இக்கருத்தானது	USD கூறுகள் மீதான விலைமாறல் கொடுப்பனவுகளின் போது ஒப்பந்த நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர்

	அறிமுகப்படுத்துவதற்கான ADB யின் வலியுறுத்தலின் படி இவ்அனுமதியானது விளக்கமளிக்கப்பட கூடாது எனவும் அதற்குப்பதிலாக இத்திட்டம் அதன் கொள்கைகளை மீறுவதாக ADB கருதவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். இக்கூற்றின் பிரகாரம் அமைச்சரவைக்கு இந்நிபந்தனையுடனான ஒப்புதலினை அனுப்பவும் ஒப்பந்ததார்களுடன் துணை உடன்படிக்கைகளை கைச்சாத்திட முன்னர் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தினை விசாரனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விலைவித்தியாசத்தின் அடிப்படையில் அதாவது USD விலை மாற்றத்தின் கொடுப்பனவு எல்லைக்கு மாத்திரம் செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவுகளை செலுத்தும் எல்லையிலிருந்து எழும் எந்தவொரு விடையத்திற்கும் ADB பொறுப்பேற்காது என்பதனை உறுதி செய்ய ADB ஆனது அதன் ஒப்புதலில் உள்ளடக்குகின்றது என்பது ஒரு பொதுவான கூற்றாக இருந்தது.	முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
ii.	2024 திசெம்பர் 31 அளவில் ரூபா 2,370,038,000 மற்றும் ரூபா 136,399,969 தொகையான விலைமாற்றங்கள் முறையே துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை மற்றும் கடல்சார் மார்க்க வசதியளிப்பு நிலையம் என்பனவற்றிற்காக செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ஐ.அ.டொலர் 4,112.05 மற்றும் 217,908.76 தொகையான 02 விலைமாற்றங்கள் 2025 ஏப்ரல் 09 அளவில் கொடுப்பனவிற்காக அதன்படி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. PAEH இற்கான ஐ.அ.டொலர் 8 மில்லியனிற்கான உடன்பட்ட விலைமாற்றமானது ஒப்பந்ததாரரினால் அதன்படி பெறப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 27 ஆம் திகதிய SCAPC குழு அறிக்கையின் பிரகாரம் ஒரு ஐ.அ.டொலரிற்கான நிலையான நாணயமாற்று விகிதமானது முறையே MFC மற்றும் PAEHP என்பனவற்றிற்காக ரூபா 195.82 மற்றும் 161.98 ஆக இருந்ததென அதில்	ஒப்பந்த விலையானது 2 கூறுகளில் செலுத்தப்பட்டிருந்தும், LKR மற்றும் USD, ஒப்பந்த விலையானது LKR இல் மாத்திரமே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நிலையான நாணயமாற்று விகிதங்கள் உண்மையான ஒப்பந்த விலையில் உள்ளடக்கப்பட்ட USD தொகையானது ஒப்பந்தகாலப்பகுதியின் போது மாற்றம் செய்யப்பட மாட்டாது என்பதனை உறுதி செய்ய ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. நிலையான நாணயமாற்று விகிதங்களானது விலைமாற்றங்களிற்கு எதிராக எவ்வித பாதுகாப்பினையும் வழங்காது. உண்மையான ஒப்பந்த விலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட USD தொகையில் குறைப்பனவானது ஏற்படவில்லை. இறக்குமதி	USD கூறுகள் மீதான விலைமாறல் கொடுப்பனவுகளின் போது ஒப்பந்த நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

	குறிப்பிடப்பட்டிருந்தது. இது ஐ.அ.டொலர் செலவிலான அதிகரிப்பிற்கு எதிரான ஓர் பாதுகாப்பினை வழங்குகின்றது. இருப்பினும் குழு அறிக்கைகளானது துணை உடன்படிக்கையில் திருத்தியமைக்கப்பட்ட ஆரம்பிப்பு திகதியான 2023 மே 01 இன் பின்னரான எதிர்பாராத பணவீக்கம் காரணமாக உண்மையாக உடன்பட்ட ஒப்பந்த கூட்டுமொத்தத்தின் ஐ.அ.டொலர் தொகைகளிலான குறைப்புக்களுடன் தொடர்புபட்ட எவ்வித கணிப்பீடுகளையும் உள்ளடக்கவில்லை.	விலைகளில் ஏதாவது அதிகரிப்பானது USD விலைமாற்றத்தினை ஈடுசெய்யப்படுகின்றது.	
iii.	SCAPC குழு அறிக்கையின் பிரிவு 2.5 மற்றும் துணை உடன்படிக்கையின் பிரிவு I என்பனவற்றின் பிரகாரம், USD உடன் கொள்வனவு செய்யப்பட்ட இறக்குமதிகளின் அதிகரிக்கப்பட்ட கிரயத்திற்கான விலைச்சீராக்கங்களினை பற்றி மாத்திரமே அது குறிப்பிடுகின்றது. இருப்பினும் 02 ஆவணங்களின் முடிவிலும் ஊழியர், மூலதனபொறி மற்றும் ஏனையவைகள் உள்ளடங்களான அனைத்து உள்ளீடுகளிற்காகவும் விலை மாற்றங்களானது அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன்படி, முறையே துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை மற்றும் கடல்சார் மார்க்க வசதியளிப்பு நிலையம் என்பவற்றிற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,370,038,000 மற்றும் ரூபா 136,399,969 தொகையான விலை மாற்றங்களிற்கான கொடுப்பனவுகள் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஒப்பந்த அடிப்படையில் விலை மாற்றமானது ஒப்பந்த விலையின் உள்நாட்டு கூறிற்காக செலுத்தப்பட்டுள்ளது. அது 48.2% ஆகும். ஒப்பந்த விலையின் USD கூறு (51.8%) ஒப்பந்ததாரரினால் அவரது வெளிநாட்டு உள்ளீடுகளிற்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது.	USD கூறுகள் மீதான விலைமாறல் கொடுப்பனவுகளின் போது ஒப்பந்த நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
iv.	மேலும் ஒப்பந்த இலக்கம்	CIDA விலைமாற்றம்	USD கூறுகள் மீதான

	RDA/ADB/OCB/PAEH/CW-01 இற்கான துணை உடன்படிக்கையில் கோடிட்டுக்காட்டப்பட்ட எடையிடும் விகிதங்களில் ஓர் முரண்பாடு காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவை உண்மையான ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓர் உதாரணமாக, ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு 13.8 இன் பிரகாரம் துணை உடன்கடிக்கையில் உள்நாட்டு நாணயக்கூறின் கணிப்பொருளிற்கான இடையிடலிற்கான சதவீதம் 0.69 ஆகும். இருப்பினும் வெளிநாட்டு நாணயக்கூறில் உள்ள அஸ்பால்ட் இற்கான இடையிடலின் சதவீதம் 10 ஆகும்.	சுத்திரமானது அனைத்து வேலைகளினதும் உள்நாட்டு கூறிற்கு பொருந்தக்கூடியதாகும் உள்நாட்டு கூறிற்காக, இவ் விலைமாற்றமானது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கணிப்பிடப்படுகின்றது. இருப்பினும், USD கூறிற்காக இது 2023 மே 01 இல் இருந்து அமுலாகும் துணை உடன்படிக்கையின் பின்னர் கணிப்பிடப்பட்டது.	விலைமாறல் கொடுப்பனவுகளின் போது ஒப்பந்த நிபந்தனையின் (COC) பிரகாரம் வேலைவழங்குனரின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
(ஐ)	i. இலங்கை துறைமுக அதிகார சபைக்கான கடல்சார் வசதியளிப்பு நிலைய கட்டிடத்தின் பூர்த்தியாக்கல் மற்றும் கையளித்தலிலுள்ள தாமதம் காரணமாக, SLPA வின் தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பிற்கான மூன்று மாறல் கட்டளைகளின் கீழ் 2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு மொத்தம் ரூபா 340.87 மில்லியனை செயற்திட்டமானது செய்திருந்தது. அதற்குமேலதிகமாக, மேற்கூறப்பட்ட கொடுப்பனவானது அனுமதிக்கப்பட்ட மாறல் எல்லையினை விட 12.36 மில்லியனால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.	ஏற்றுக்கொன்டனர்.	COC இன் பிரகாரம் மாறல் கிரயங்களினை குறைக்க நடவடிக்கை எடுக்குக.
	ii. அதற்குமேலதிகமாக, இலங்கை துறைமுக அதிகார சபைக்கான (SLPA) கணக்காய்வு மற்றும் ஊடக கட்டிடம் மற்றும் SLPA வின் தவிசாளர் அலுவலகத்திற்கான வாடகைக்கட்டிடம் என்பனவற்றினை உள்ளடக்கிய வாடகை	ஏற்றுக்கொன்டனர்.	COC இன் பிரகாரம் மாறல் கிரயங்களினை குறைக்க நடவடிக்கை எடுக்குக.

கட்டிடங்களிற்கான மாறல் எல்லைகள் ரூபா 164,301,454.05 இனால் அதிகரித்திருந்தது.

3.3 பயன்படுத்தப்படாத வளங்கள்

	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	கடன் உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்டிருந்த ஐ.அ.டொலர் 293.89 மில்லியனில், 2024 திசெம்பர் 31 வரையான மொத்த கடன் பயன்பாடு ரூபா 60,780.38 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 211 மில்லியனாக இருந்ததுடன் ரூபா 24,251.95 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 82.89 மில்லியன் பயன்படுத்துவதற்கு மீதமாக இருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனின் வழங்கப்படாத கொடுப்பனவுகள் மீது ரூபா 430,922,200.71 ஒப்படைப்புக் கட்டணங்கள் சிக்கனமற்ற முறையில் கடன் வழங்கும் முகவரிற்கு செலுத்தப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.	2020 காலப்பகுதியிலான கோவிட் நிலைமை மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நிலமைகள் என்பன செயற்திட்டத்தின் மந்தகதியான செயலாற்றலினை பெரிதும் பாதிக்கின்றது.	செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றலின் உரிய நேர அடைவுகளை செயற்திட்ட பணிப்பாளர் உறுதி செய்ய வேண்டும்.
(ஆ)	சிவில் வேலைகளின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக, மீளாய்வாண்டிற்கான GOSL ஒதுக்கீடு ரூபா 30 மில்லியனில், செயற்திட்டமானது ஒதுக்கீட்டில் 87.76 சதவீத்தினை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு திகதிகளின் ஒதுக்கீடு ரூபா 20,000	ஏற்றுக்கொண்டனர். VO – 60 அனுமதியில் தாமதம். மற்றும் MFC ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் என்பன இந்நிலமைக்கான காரணங்களாக உள்ளன.	திறைசேரியினால் வழங்கப்பட்ட திகதிகளின் அடிப்படையில் செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றலின் உரிய நேர அடைவுகளை செயற்திட்ட பணிப்பாளர் உறுதி செய்ய வேண்டும்.

மில்லியனில் 61.63 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

3.4 விளைவற்ற வளங்கள்

	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	விலைமாற்றங்களிலிருந்து உருவான நிதிப்பற்றாக்குறை காரணமாக, ஐ.அ.டொலர் 28.4 மில்லியன் பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட இலத்திரனியல் தீர்வை வரி சேகரிப்பு முறையினை (ETC) ரத்துச்செய்வதற்கு 2023 பெப்ரவரி 02 அளவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்திசைவிற்கு வேண்டுகோள்விடுக்கப்பட்டிருந்தது. ADB ஆனது ரத்துச்செய்வதற்கான ஒத்திசைவினை வழங்கியுள்ளது, இருப்பினும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இது தொடர்பாக ஏற்பட்ட மொத்த செலவு ரூபா 176.48 மில்லியனாகும்.	இருப்பினும் ஆலோசகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வடிவமைப்புக்கள் மற்றும் விலைமனு ஆவணங்கள் என்பன PPP அடிப்படையிலான முறைமைக்கு மும்மொழிவுகளை கோருவதற்காக பயன்படுத்தப்பட்டது.	இலத்திரனியல் சுங்கவரி சேகரிப்பின் அமுல்படுத்தலிற்கான ஏற்பட்ட செலவினமானது எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்குவதற்கான சாத்தியத்தினூடாக அது நியாயப்படுத்தப்பட்டிருந்தமையினை செயற்திட்ட பணிப்பாளர் உறுதி செய்ய வேண்டும்.
(ஆ)	2024 மார்ச் 04 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதி இல CP/24/299/608/015 இல் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம், அமைச்சரவை நியமித்த பேரம்பேசல் குழு (CANC) மற்றும் செயற்திட்ட குழு என்பன நியமிக்கப்பட்டதுடன் PPP அடிப்படையிலான ஓர் முறைமையினை அமுல்படுத்த பெறுகை செயன்முறைகளை செய்துகொண்டிருக்கின்றன. 2024 நவம்பர் 12 இல் நடாதத்பப்பட்ட கூட்டத்தின் CANC கூட்டக்குறிப்பு இல 07 இன் பிரகாரம், நிதிமதிப்பீட்டிற்கான	நிதிவிலைமனுவின் மதிப்பாய்வு செயன்முறையிலுள்ளது. CANC இன் பரிந்துரையின் பிரகாரம், ADB இடமிருந்து ஓர் பொருளாதார நிபுனர் வேண்டப்பட்டிருந்தார். பெறுகை செயன்முறை தொடரப்படும்.	செயற்திட்ட செயற்பாடுகள் செயல்நடவடிக்கை திட்டத்தில் கூறப்பட்ட படி அமுல்படுத்தப்படுகின்றதா என செயற்திட்ட பணிப்பாளர் உறுதி செய்ய வேண்டும்.

ஓர் விலைமனுதாரர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இருப்பினும், 2022 இல் முகாமைத்துவத்தினால் குறிப்பிடப்பட்ட படி ஓர் மாற்றச்செயன்முறையின் அடிப்படையில் ETC முறைமையினை அமுல்படுத்த செயற்திட்டத்தினால் முடியாமலிருந்தது.

3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
நிதி ஒழுங்குவிதிகள் இல 137 மற்றும் 138 என்பவற்றின் பிரகாரம், ஓர் கொடுப்பனவு உறுதிச்சீட்டினை அத்தாட்சிப்படுத்த அல்லது அனுமதிக்க முன்னர் அக்கொடுப்பனவு உறுதிச்சீட்டின் உண்மைத்தன்மை மற்றும் பூரணத்துவத்தினை உரிய உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டும். இருப்பினும், நாங்கள் ஓர் மாதிரியாக தெரிவு செய்திருந்த 2024 சனவரி தொடக்கம் ஜூன் வரையான ஆறு மாதங்கள் காலப்பகுதியில் பின்வரும் அவதானிப்புக்கள் இடம்பெற்றன. i. ரூபா 432,584.15 தொகையான 10 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் தயாரிப்பு திகதியிற்கு முன்னர் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்தது. ii. ரூபா 277,350 பெறுமதியான 04 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் கொடுப்பனவு திகதியிற்கு பின்னர் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்தது. iii. ரூபா 3,627,921.09 பெறுமதியான 21 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அனுமதிக்கும் அதிகாரியினால் கொடுப்பனவு சீட்டிற்கான கொடுப்பனவு திகதியின் பின்னர்	கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளில் கவனக்குறைவாக சில தவறான திகதிகள் எழுதப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளில் திகதிகளை இடும் போது உரிய கவனம் எடுக்க உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறை வழங்கப்பட்டுள்ளது.	அனைத்து கொடுப்பனவுகளும் நிதிஒழுங்குவிதிகளுடன் இணங்குவதனை செயற்திட்ட கணக்காளர் உறுதி செய்தல் வேண்டும்.

அனுமதிக்கப்பட்டிருந்தது.

iv. ரூபா 1,105,257.02 பெறுமதியான 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் உரிய திகதிகள் அத்தாட்சிப்படுத்தும் மற்றும் அனுமதிக்கும் உத்தியோகத்தர்களினால் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.